# கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

## வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய விண்ணப்பம் கோரல்

பத்தரமுல்லை, செத்சிறிபாய II -ஆம் கட்டத்தில் அமைந்துள்ள கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஊடகப் பிரிவில், பின்வரும் வெற்றிடங்களுக்கு **தற்காலிக அடிப்படையில்** ஆள்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பதவிகள்-

1. ஒளிப்பதிவாளர்கள் (வீடியோ கேமராமேன்)

2. ஸ்டில் போட்டோகிராஃபர்

3. கேமரா ஆபரேட்டர் உதவியாளர்

1. பதவி- ஒளிப்பதிவாளர்கள்(வீடியோ கேமராமேன்) **(01 வெற்றிடம்)**
2. பதவி- ஸ்டில் போட்டோகிராஃபர் **(01 வெற்றிடம்)**

**கல்வித் தகைமைகள்/தொழில்முறைத் தகைமைகள்** -
க.பொ.த(சா.த) தேர்வில், கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ்/ ஆங்கில மொழி உட்பட, குறைந்தபட்சம் 4 பாடங்களில் சாதாரன சித்தி பெற்று, ஒரே அமர்வில் 6 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**தொழில்முறைத் தகைமைகள்** - புகைப்படக்கலையில் தேசிய தொழிற்கல்வித் தகுதி (NVQ) மற்றும் (5) நிலைக்குக் குறையாத ஒரு தொழில்நுட்பப் பாடநெறி மற்றும் பெறப்பட்ட சான்றிதழ்.

**அனுபவம்** - ஒரு புகழ்பெற்ற நிறுவனத்தில் புகைப்படக் கலைஞராக 5 வருட அனுபவம்.

**உடல் திறன் தகுதிகள்** - ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் போதுமான தகுதியுடன் இருக்க வேண்டும்.

**ஏனைய தகைமைகள்**

1. இலங்கை குடிமகனாக இருக்க வேண்டும்.

2. சிறந்த நன்னடத்தை உடையவராக இருக்க வேண்டும்.

3. விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் தேதியான 2026.04.25 க்குள், பட்டியலிடப்பட்டுள்ள அனைத்துத் தகுதிகளும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

4. வயது- 18 வயதுக்குக் குறையாமலும், 35 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

**ஒதுக்கப்பட்ட பணிகள்-**

1. வீடியோ கேமராமேன்

வீடியோ பதிவு செய்தல், படத்தொகுப்பு, உபகரணங்கள் மற்றும் ஸ்டுடியோ மேலாண்மை, வீடியோ பராமரிப்பு வீடியோ ஆவணக்காப்பக மேலாண்மை மற்றும் அட்டவணைப்படுத்துதல், வீடியோ கேமரா இருப்பு மற்றும் சேமிப்பு, மதிப்பீடு செய்தல், சிறப்பு நிகழ்வுகள் மற்றும் சமூக ஊடக வலைப்பின்னல்களைப் படம்பிடித்துப் படத்தொகுப்பு செய்தல்.

2. ஸ்டில் போட்டோகிராஃபர்

எந்த வகை கேமராவையும் பயன்படுத்துதல், ஒளிப்பட அளவியல் முறையைப் பயன்படுத்திப் புகைப்படங்கள் எடுத்தல், டிஜிட்டல் முறையில் பிரேம்களைப் பெற்று ஒழுங்குபடுத்துதல், மற்றும் கணினி அடிப்படையிலான படத்தொகுப்பு.

சம்பளம் - ரூ. 50,090/- + வாழ்க்கைச் செலவு, உட்பட மாதாந்த கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.

ஆட்சேர்ப்பு முறை-

கட்டமைக்கப்பட்ட நேர்காணல்

| பாடங்கள் | அதிகபட்ச மதிப்பெண்கள் | தேர்ச்சி மதிப்பெண்கள் |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 25 | 40% |
| மேலதிக தொழில்முறை தகைமைகள் | 25 | |
| மேலதிக அனுபவம் | 20 | |
| மொழித் தேர்ச்சி | 15 | |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி அறிவியல் அறிவு | 10 | |
| நேர்காணலின் போது வெளிப்படுத்த வேண்டிய திறன்கள் | 05 | |

3. பதவி - கேமரா ஆபரேட்டர் உதவியாளர் (**01** வெற்றிடம்) கல்வித் தகைமைகள் /தொழில்முறைத் தகைமைகள் - க.பொ.த(சா.த) தேர்வில் இரண்டு அமர்வுகளுக்கு மிகாமல் ஆறு (06) பாடங்களில் இரண்டு கிரெடிட்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அனுபவம் - அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கேமரா ஆபரேட்டர் உதவியாளராக மூன்று (03) ஆண்டுகள் அனுபவம்.

உடல் திறன் தகுதிகள் - ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளைச் செய்வதற்கும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் போதுமான தகுதியுடன் இருக்க வேண்டும்.

ஏனையவை -

1. இலங்கை குடிமகனாக இருக்க வேண்டும்.
2. சிறந்த நன்னடத்தை உடையவராக இருக்க வேண்டும்.

3. விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் தேதியான 2026.04.25 க்குள், பட்டியலிடப்பட்டுள்ள அனைத்துத் தகுதிகளும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

4. வயது- 18 வயதுக்குக் குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

ஒப்படைக்கப்பட்ட கடமைகள் - ஒளிப்பதிவாளர்கள் மற்றும் கேமரா இயக்குபவர்களுக்கு, கேமராக்கள் மற்றும் பிற உபகரணங்களைத் தேவையான இடங்களுக்கு நகர்த்துவதில் உதவுதல், கேமரா உபகரணங்கள் மற்றும் படத்தொகுப்பு ஸ்டுடியோ உபகரணங்களைப் பராமரித்துச் சுத்தம் செய்தல், மற்றும் ஊடகப் பிரிவின் பணிகளுக்கு உதவுதல்.

சம்பளம் - ரூ. 40,000/- + வாழ்க்கைச் செலவு, உட்பட மாதாந்த கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.

ஆட்சேர்ப்பு முறை-

| பாடங்கள் | அதிகபட்ச மதிப்பெண்கள் | தேர்ச்சி மதிப்பெண்கள் |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | 40% |
| மேலதிக தொழில்முறை தகைமைகள் | 25 | |
| மேலதிக அனுபவம் | 30 | |
| மொழித் தேர்ச்சி | 10 | |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி அறிவியல் அறிவு | 10 | |
| நேர்காணலின் போது வெளிப்படுத்த வேண்டிய திறன்கள் | 05 | |

விண்ணப்பிக்கும் முறை-

மேற்குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கான தகுதிகளை நீங்கள் பெற்றிருந்தால், கீழே உள்ள விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து, அதனை உரிய கல்வி மற்றும் தொழில்முறைத் தகுதிகளின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளுடன், உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு, செயலாளர், கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு, 01 ஆம் மாடி, செத்சிறிபாய கட்டம் II , பத்தரமுல்லை என்ற முகவரிக்கு, விண்ணப்பங்கள் கோருவதற்கான கடைசித் திகதியான 25.04.2026-க்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

எல்லா விதத்திலும் முழுமையான விண்ணப்பங்களுக்கு மட்டுமே நேர்காணல்கள் நடாத்தப்படும்.

செயலாளர்

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு

...........................................................................பதவிக்கான விண்ணப்பப் படிவம்

1. தனிப்பட்ட தகவல்

1.1 முதலெழுத்துக்களுடன் கூடிய பெயர் (ஆங்கில தலைப்பு எழுத்துக்களில்)..............................................................................................................................
.................................................................................................................................................................................
...........................................

1.2 முழுப் பெயர் (ஆங்கிலத் தலைப்பு எழுத்துக்களில்)..............................................................................................................................
.................................................................................................................................................................................
...........................................

1.3 முழுப் பெயர் (சிங்களம்/தமிழில்)
.................................................................................................................................................................................
.......................................................................................

1.4 நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில்)
...................................................................................................................................
...................................................................................................................................

1.5 நிரந்தர முகவரி ((ஆங்கிலத்தலைப்பு எழுத்துக்களில்)..............................................................................................................................
.......................................................................................

1.6 பால் (ஆண்/பெண்)..........................................................................................

1.7 திருமணமானவர்/திருமணமாகாதவர்..................................................

1.8 தேசிய அடையாள அட்டை எண்:-.....................................................

1.9 பிறந்த திகதி:-..................................................................................

1.10 தொலைபேசி எண்:-.........................................................................

1.11 மாவட்டம்.......................................................................................

1.12 மின்னஞ்சல் முகவரி.......................................................................

2. கல்வித் தகைமைகள்.................................................................................

2.1 க.பொ.த(சா.த) பரீட்சை வருடம்:-..................

பரீட்சை சுட்டெண்:-............................

| எண் | பாடங்கள் | சித்தி | எண் | பாடங்கள் | சித்தி |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

3. வேறு கல்வித் தகைமைகள் :-
........................................................................................................................................................
........................................................................................................................................................
........................................................................................................................................................

4. தொழில்முறை தகைமைகள்:-
........................................................................................................................................................
........................................................................................................................................................
........................................................................................................................................................

5. வேறு தகைமைகள்:-
........................................................................................................................................................
........................................................................................................................................................
........................................................................................................................................................

6. விண்ணப்பதாரரின் உறுதிமொழி:- இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்று நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:- ....................................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்